**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC. 207/2016 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | அ.சா. 7 |
| Name | : | திருமதி. பவளவள்ளி |
| Father's Name/Husband Name: | | திரு. கருணாநிதி |
| Village | : | கத்தாழைமேடு |
| Taluk | : | பெரம்பலூர் |
| Age | : | 50/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 20.11.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரி 1 ஆஜர். எதிரிகள் 2, 3 ஆஜர் இல்லை அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் பெரம்பலூர் அஸ்வின்ஸ் நிறுவனத்தில் பணி புரிகிறேன். அ.சா.1 சோபனா எனது மகள். 1வது எதிரி சீனிவாசன் எனது மருமகன். 2வது எதிரி மாணிக்கம் மற்றும் 3வது எதிரி பூங்கோதை எனது சம்மந்தி. என் மகள் சோபனா எதிரிகள் அவரை கொடுமைப்படுத்தவதாக போலிசில் புகார் அளித்துள்ளார். எனது மகளுக்கும் 1வது எதிரி சீனிவாசனுக்கும் கடந்த 2006ம் வருடம் திருமணம் நடந்தது. திருமணத்தின்போது எனது மகளுக்கு 25 பவுன் நகையும் வீட்டு உபயோகப்பொருட்களும் சீதனமாக கொடுத்தேன். திருமணத்தின் பிறகு எனது மகள் எதிரிகளுடன் கூட்டுக்குடும்பமாக பழைய அரசமங்களத்தில் குடியிருந்தார். எனது மகள் கர்ப்பமான பிறகு அதிக வேலை செய்யவில்லை என்று சொல்லி எதிரிகள் மூவரும் என் மகளை கொடுமை செய்தனர். அது குறித்து நான் எதிரிகளிடம் கேட்ட போது அவர்கள் என்னை அசிங்க அசிங்கமாக திட்டினார்கள். அதன் பிறகு என் மகளை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று அதன்பிறகு

பிரசவம் பார்த்து என்னுடன் வைத்திருந்தேன். என் மகளுக்கு முதலில் பெண் குழந்தை பிறந்தது. என் மகளுக்கு நான் தான் பிரசவ செலவு செய்தேன். 30 நாட்களில் எதிரிகள் அவர்களுடைய பேரப்பிள்ளைகளை என் வீட்டில் விடக்கூடாது என்று சொல்லி அழைத்துச் சென்றனர். அதன் பிறகு 6 மாதங்கள் கழித்து எனது மருமகன் வெளிநாடு சென்றுவிட்டார். என் மகளை அவருடைய மாமியாரும், மாமனாரும் கொடுமை செய்துள்ளனர். என் மகளின் மாமனார் என் மகளிடம் தவறாக நடக்க முயற்சி செய்தார். அதுகுறித்து நான் சென்று கேட்ட போது என் மகள் மீது மண்ணெண்ணை ஊற்றி அவரது மாமனார் கொளுத்த சென்றார். அதன்பிறகு நான் என் மகளை அழைத்து வந்து விட்டேன். அதன் பிறகு 1–1/2 வருடங்கள் கழித்து மருமகன் வெளிநாட்டிலிருந்து வந்த பிறகு என் மகளை அவர்கள் வீட்டிற்கு அழைத்துச் சென்றனர். அதன்பிறகு எனது மகள் இரண்டாவது முறையாக கர்ப்பமானார். அப்பொழுதும் அவரை எதிரிகள் அடித்து கொடுமைப்படுத்தினார்கள். நான் என் மகளை அழைத்து வந்து 2வது பிரசவமும் பார்த்தேன். என் மகளுக்கு இரண்டாவதாக பெண் குழந்தை பிறந்தது. எனது மருமகன் எங்கள் வீட்டிற்கு வந்து அவரது குழந்தைகளை அழைத்துச் சென்றுவிட்டார். என் பேத்திகளை எதிரிகள் பள்ளியில் சேர்த்துவிட்டனர். என் மகள் பார்க்க சென்றபோது எனது மகளை என் மருமகன் ரோட்டில் வைத்து அடித்துவிட்டார். அதன்பிறகு என் மகள் எதிரிகளின் வீட்டிற்கு போகவில்லை என்று என்னிடம் சொல்லிவிட்டார். அதன்பிறகு புத்திமதி சொல்லி அனுப்பி வைக்கலாம் என்று முயற்சி பண்ணினேன் எதிரிகள் வந்து என் மகளை அழைத்துச் செல்லவில்லை. நீதிமன்ற மூலமாகவும் எனது மகளையும் மருமகனையும் சேர்த்து வைக்க முயற்சி செய்தும் அவர்கள் ஒத்துவரவில்லை. எதிரிகள் அனைவரும் என்னையும் எனது இரு மகள்களையும் ஊரிலியே இருக்கக்கூடாது என்று சொல்லி அடித்து கொடுமை படுத்தினார்கள். அதன்பிறகு நாங்கள் லெப்பைக்குடிக்காடு அருகே குடிவந்து விட்டோம். எனது மருமகன் இரண்டாவதாக ரஞ்சிதா என்ற பெண்ணை திருமணம் செய்து கொண்டார். 2வது திருமணத்தை யார் செய்து வைத்தனர் என்ற விபரம் எனக்கு தெரியாது. இறுதியாக எனது மகள் அவரது குழந்தைகளை பார்ப்பதற்காக போலிசில் புகார் அளித்தார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கு சம்மந்தமாக போலிசார் எந்த தேதியில் எந்த இடத்தில் எத்தனை மணிக்கு என்னை விசாரித்தனர் என்றால் எனக்கு தெரியாது. முதல் விசாரணையில் கூறிய சங்கதிகளை தான் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. திருமணத்தின் போது 25 பவுன் நகைகள், சீர்வரிசைப்பொருட்களுக்குரிய ஆவணங்களை போலிசார் விசாரணையில் தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. அ.சா.1 புகார்தாரர் எனது மகள் என்றால் சரிதான். என் மகளுக்கு நகை மற்றும் சீர் வரிசை செய்திருந்தா அதற்கான பில் ரசீதுகளை போலிசார் விசாரணையில் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. எனது மகளுக்கு பிறந்த 2 பெண்பிள்ளைகள் எந்த தேதி மற்றும் வருடத்தில் பிறந்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. முதல் பெண் குழந்தைக்கு மருத்துவ செலவு நான் பார்க்கவில்லை அவ்வாறு பார்த்திருந்தால் எந்த தேதியில் அவர் பிறந்தார் எனக்கு தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. எனது பேத்திகளின் பெயர் எனக்கு தெரியுமா என்றால் முதல் பேத்தியின் பெயர் துர்கா, 2வது பேத்தியின் பெயர் ஆஷா. 2வது பேத்தி ஆஷா எந்த தேதி மற்றும் வருடத்தில் பிறந்தார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எதிரிகள் அனைவரும் எந்த தேதியில் எந்த இடத்தில் அ.சா.1 கொடுமைப்படுத்தினார் என்று போலிசார் விசாரணையிலும், முதல் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் என்ன வார்த்தைகள் சொல்லி திட்டினார்கள் என்று போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிரி எந்த தேதியில் எந்த இடத்தில் எத்தனை மணிக்கு இரண்டாவது திருமணம் செய்து கொண்டார் என்ற விபரம் போலிசார் விசாரணையில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். அ.சா.1 தனக்கு நடந்த கொடுமைகளை என்னிடம் சொன்னார் என்றாலும் அது எந்த தேதியில் எந்த இடத்தில் நடந்தது என்று போலிசார் விசாரணையில் நான் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 எந்த தேதியில் புகார் கொடுத்தார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் சம்மன் கொடுத்து என்னை விசாரணை செய்யவில்லை என்றால் ஞாபகமில்லை. எனது மகளுக்கும், எதிரிகளுக்குமிடையே குடும்பத்தில் நடக்கும் விவரம் எதுவும் எனக்கு தெரியாது என்றாலும், அ.சா.1 எனது மகள் என்பதால் அவர் அளித்த புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கு சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. 2

பெண்குழந்தைகளும் 1வது எதிரியின் பராமரிப்பில் தான் வளர்ந்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

**மறு விசாரணை : இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.